**(அரசாங்க/ பகுதியளவு அரசாங்க ஊழியர்கள்/வெளியார்)**

முடிவுத் திகதி **- 17.07.2026**

# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் (CEP I) பின்வரும் பதவிகளுக்கு அரசாங்க/ பகுதியளவு அரசாங்க ஊழியர்கள்உட்பட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வீதி நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) அடிப்படையில் கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் நிதி அமைச்சினால் 2026.03.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்

- **திட்டத்தின் பெயர் - "மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டம் (CEP I)**

**( 25- 200 மில்லியன் ஐ.அ. டொலர்களுக்கு மேல் வகுதி)**

| **திட்டத்தின் பெறுமதி (ஐ.அ.டொ. மில்லியன்)** | **திட்டத்தின் பெயர்** | **பதவிப் பெயர்** | **02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கைக்கு ஏற்ப குறிப்பிடப்பட்டது** | **வெற்றிடங்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| அமெரிக்க டொலர் 200 மில்லியனுக்கு அதிக அல்லது அதற்கு சமமான வகுதி | மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் I (CEP I) | நிதி உதவியாளர் | உதவி ஊழியர் MN 2/ MN 4-2025 | 01 |
| | | சாரதி | உதவி ஊழியர் PL 03 - 2025 | 03 |

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் படி, நிதி உதவியாளர் (உதவி ஊழியர்) MN 4-2025/ MN 2-2025 அடிப்படைத் தகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன**

**01. <u>நிதி உதவியாளர் (MN-4 - 2025)</u>**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.

அத்துடன்

- தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம் (அதே பதவி)

**02. <u>நிதி உதவியாளர் (MN-2 - 2025)</u>**

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் மொழி மற்றும் கணிதம் பாடங்கள் மற்றும் 2 பாடங்கள் உட்பட (4) திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் .

மற்றும்

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் வர்த்தக பிரிவில் ஒரே அமர்வில்அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றிருக்க வேண்டும் .

அத்துடன்

- தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம் (அதே பதவி)

**<u>மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் படி சாரதி PL 3 – 2025 (உதவி ஊழியர்கள்) அடிப்படைத் தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.</u>**

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் மொழி மற்றும் ஏனைய ஒரு பாடம் உட்பட (2) திறமைச் சித்திகளுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் .

அத்துடன்

- சாரதி அனுமதிப்பத்திரம்– வாகனங்களின் வகை C மற்றும் C1

அல்லது

- புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தில் B வகை

அத்துடன்

- சாரதியாக 3 வருட அனுபவம்

**<u>பொதுவான நிபந்தனைகள்:</u>**

- ஆட்சேர்ப்பு, சம்பளம், நன்மைகள் மற்றும் பிற சேவை நிபந்தனைகள் நிதி அமைச்சினால் 2026.03.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படியாகும்.
- தெரிவுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மற்றும் ஏனைய சுற்றறிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும்.
- அனைத்து விண்ணப்பங்களும் இந்த சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி நிரப்பப்பட வேண்டும் என்பதோடு, தொடர்புடைய ஆவணங்களின் அனைத்து பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தேவையெனில் சம்பந்தப்பட்ட பகுதி மற்றும் / அல்லது நாட்டின் எந்த இடத்திலும் பணியாற்ற சம்மதிக்க வேண்டும்.

**01. வயது வரம்பு:**

- அரச, பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்கு 60 வயதிற்கு கீழ்
- ஏனையவர்களுக்கு 64 வயதிற்கு கீழ்

**02. சம்பளம்:**

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிதி , திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்.

**03. வேலைவாய்ப்பு விதிமுறைகள்:**

- இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது, ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கானது. சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையில் சேவை நீடிப்பு கருத்திற்கொள்ளப்படலாம்.

- விண்ணப்பதாரர் ஏற்கனவே அரச சேவை , மாகாண அரச சேவை, உள்ளூராட்சி மன்றங்கள் , அரச கூட்டுத்தாபனங்கள் , நியதிச்சட்ட சபைகள் அல்லது முழுமையாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் ஆகியவற்றில் நிரந்தர பதவியில் இருந்தால், 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் பத்தி 2.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள, நிலையான பதவியின் நியமன அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பரிசீலிக்கப்படும் சரியான விடுவிப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

- விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்யாத மற்றும் விண்ணப்பத்துடன் சரியான தகவல்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள், மற்றும் 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் நியமனங்களுக்காக கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.

- நியமனங்களை வழங்குதல் அல்லது வழங்காதிருத்தல் மற்றும் சேவை நீடிப்புகள் குறித்த முடிவு சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுளின்படி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் படியானதாகும்.

**04. நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

அரச/பகுதியளவு அரச நிறுவனங்களில் ஏற்கனவே நிரந்தரப் பதவியை வகிக்கும் விண்ணப்பதாரர், அவர்களின் நிறுவனத் தலைவர் மூலமாகவும், 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பத்தி 2.3.3 இன் படி, நிலையான பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான அங்கீகாரத்துடனும், விடுவிப்பு அடிப்படையில் பரிந்துரையுடனும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். (இல்லாதபட்சத்தில், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)

**05. விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள், கல்வித் தகுதிகள், அடிப்படை பட்டத்தின் பிரதி, பணி அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன், கடித உறையின் மேல் இடது மூலையில் விளம்பரத்தில் உள்ள பதவி மற்றும் கருத்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு, பதிவுத் தபாலில் செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, "மகனெகும மகமெதுர", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2026.07.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் அல்லது அமைச்சின் நிர்வாகப் பிரிவில் கையளிக்கப்படும்.

**06. விசேட கவனத்திற்கு**

- **தரப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**
- **விண்ணப்பத்துடன் சான்றிதழ் பிரதிகளைச் சமர்ப்பித்த தகைமைகள் மட்டுமே தெரிவுக்காக கவனத்திற் கொள்ளப்படும்.**

**07. ஏதேனும் விசாரணைக்கு தயவுசெய்து பின்வரும் இலக்கத்தை தொடர்பு கொள்ளவும் - 011-2271048**

**08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்களில் வெளியிடப்பட்ட இந்த விளம்பரத்தின் மொழி சொற்றொடர்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், சிங்கள விளம்பரத்தில் உள்ள விடயங்களே மேலோங்குதல் வேண்டும்.**

உதவி ஊழியர்களுக்கான விண்ணப்பப் படிவம் – இணைப்பு 1

**செயலாளர்**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**